மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கடந்த ஆண்டு திருப்பரங்குன்றம் ஹரிஜன மாணவர்கள் இல்லத்தில் 9 ஹரிஜன மாணவர்கள் அல்லாதவர்கள், மிகவும் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

திரு. கே. ராஜாராம் : ஆனால் சேர்க்கப்படாமல் பல ஹாஸ்டல்கள் இருக்கின்றன. திருப்பரங்குன்றம் மதுரை ஆர்.டி.ஓ. வைச் சேர்ந்தது. நான் சொல்லுவது உசிலம்பட்டி ஆர்.டி.ஓ. வைச் சேர்ந்தது. அச்சம்பட்டி கிராமத்தில் இன்னும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. நான் எத்தனையோ முறை கேட்டுக் கொண்டும் அங்கே சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இன்று நடைபெற்ற இந்த விவாதத்தின் அடிப்படையில் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

Backward Class Hostels

* 7. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(a) the places in Ramanathpuram district where hostels for Backward Class male students and female students are situated; and

(b) the number of hostels for male students and female students which were newly opened during the year 1969?

பிற்பட்ட வகுப்பினர் மாணவர், மாணவி இல்லங்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினைக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் எந்த எந்த ஊர்களில் பிற்பட்ட வகுப்பினர் மாணவர், மாணவி இல்லங்கள் உள்ளன ?

(இ) 1969-ஆம் ஆண்டில் எத்தனை புதிய மாணவர், மாணவி இல்லங்கள் திறக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) & (இ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர் இல்லம் எதுவும் தற்போது இல்லை. எனினும் 1970-71-இல் அந்த மாவட்டத்தில் கண்டரமாணிக்கம், வடக்குசமுத்திரம் ஆகிய இரு இடங்களில் மாணவர்களுக்கும், பாகனேரியில் மாணவிகளுக்கும் இல்லங்கள் முதல் முதலாகத் திறக்கத் திட்டமுள்ளது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் வட்டத்தில் மறவர்களுக்கு என்று ஒரு ஹாஸ்டல் இருப்பதாகக் கருதுகிறேன். அந்த ஹாஸ்டல் பிற்பட்டவர்களுக்கு என்று கருதப்படுகிறதா அல்லது அரிஜனங்களுக்கு என்று கருதப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : அதற்கான விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்கிறேன்.

திரு. வி. தங்கபாண்டியன் : மதுரை மாவட்டத்தில் "கள்ளர் ரெக்ளமேஷன்" என்ற அடிப்படையில் பல உணவு விடுதிகளும் பள்ளிகளும் திறக்கப் பட்டிருக்கின்றன. இராமனுதபுரம் மாவட்டத்தில் "மறவர் ரெக்ளமேஷன்" என்ற அமைப்பின் மூலமாக பின்தங்கிய மாணவர்களுக்காக பள்ளிகளையும் ஹாஸ்டல்களையும் திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : பின் தங்கிய நலக் குழுவின் அறிக்கை விரைவில் வர இருக்கிறது. அதற்குப் பிறகு உறுப்பினரின் கருத்தை நிறைவேற்ற அரசாங்கம் ஆவன செய்யும்.

Salt Pans Factory.

* 8. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Salt Pans Factory in Ramanathapuram district coastal area;

(*b*) if so, the amount proposed to be invested in it;

(*c*) whether the Central Government have offered any financial assistance for this scheme; and

(*d*) if so, how much?

உப்பளத் தொழிற்சாலை

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இராமநாதபுரம் மாவட்டக் கடற்கரைப் பகுதியில் உப்பளத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு முதலீட்டில் தொடங்கப்படும் ?

(உ) மத்திய அரசாங்கம் ஏதேனும் இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி அளிக்க முன் வந்துள்ளதா ?

(எ) ஆமெனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) & (உ) அரசின் பரிசீலனையிலிருப்பதால் மத்திய அரசை நிதி உதவிக்கு இதுவரை அணுகவில்லை.

(எ) வினாவிற்கு இடமில்லை.

Rivers in Tamil Nadu

* 9. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the rivers which have their origin in other States but provide irrigation facilities for Tamil Nadu;

(*b*) the quantum of water available to Tamil Nadu from each river every year; and

(*c*) the quantum of water available to Tamil Nadu from (1) catchment area in other States and (2) the catchment areas in Tamil Nadu?